**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 08.01.2026

**அசல் வழக்கு எண்.** 16/2023

**வா.சா. 1– பூங்கொடி, க/பெ.முருகவேலன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நீங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்துக்களும் மேலும் சில சொத்துகளும் பின்பக்கமாக இருக்கும் சொத்துக்களும் குமாரசாமி முதலியார் என்பவருக்கு ஆதியில் சொந்தமானது என்றால் சரிதான். அவரிடமிருந்து கனக சபாபதி முதலியார் என்பவர் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். கனக சபாபதி முதலியார் என்பவருக்கு வாரிசுகள் யாரும் இல்லை என்பதால் அவரது தம்பி பிள்ளைகளுக்கு அவர் உயில் எழுதி வைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த உயில் முன்னிலைக்கு உங்களுக்கு கிரயம் கொடுத்த முதல் பிரதிவாதி ராம்மோகன் என்பவருக்கு ஒரு பட்டியல் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை தான் உங்கள் கணவர் முதல்வாதி கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். அவர் கிரயம் வாங்கும்போது 39 1/2 அடிக்கு 70 அடி கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். அந்த சொத்தினை நீங்கள் இந்த வழக்கில் வழக்கு சொத்தாக குறிப்பிட்டு உள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்து தவிர ராம்மோகன் என்பவருக்கு வேறு சொத்தில் உரிமை கிடையாது என்றால் சரிதான். நீங்கள் அதாவது உங்கள் கணவர் கிரயம் வாங்கும் பொழுது அந்த இடத்தில் வீடு கட்டப்பட்டு இருந்தது என்றால் சரிதான். காம்பவுண்ட் போட்டு வீடு கட்டப்பட்டு இருந்தது. காம்பவுண்ட் போட்டதாக சொல்கிறீர்கள் அதனை யார் போட்டது என்றால் ராம்மோகன் என்பவர் தான் போட்டார். உங்களுக்கு வழக்கு சொத்தில் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரி இல்லை. என்னுடைய கணவருக்கு சொந்தமான சொத்து எனக்கு சம்பந்தப்பட்டதுதான். உங்களை இந்த வழக்கில் ஏன் தரப்பினராக சேர்த்தார்கள் என்று சொல்லி உள்ளீர்களா என்றால் சொல்லி உள்ளேன். ஏன் உங்களை ஒரு தரப்பினராக சேர்த்தார்கள் என்றால் என் கணவர் முருகவேலன் என்பவருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது ஆகவே என்னையும் ஒரு தரப்பினராக வழக்கில் சேர்க்க வேண்டும் என்கிற காரணத்திற்காக சேர்த்தார்கள். அந்த காரணத்தை

வழக்கில் சொல்லி உள்ளீர்களா என்றால் சொல்லி உள்ளேன். நீங்கள் இந்த வழக்கு சொத்தில் உள்ள சொத்துக்கு சம்பந்தம் இல்லாதவர் என்று சொன்னால் சரி இல்லை. முதல்வாதி உங்கள் கணவர் முருகவேலன் வழக்கு சொத்தை எப்பொழுது கிரயம் வாங்கினார் என்றால் 2018 ஆம் ஆண்டு கிரயம் வாங்கினார். அவர் உங்கள் கணவர் கிரயம் வாங்கும் பொழுது தாவா சொத்தின் ஒரு பக்கம் கனகசபாபதி, பன்னீர்செல்வம் மனை, வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தை தான் உங்கள் கணவர் உரிமை கோர முடியும் என்றால் சரிதான். சுற்றுச்சுவரை முதல் பிரதிவாதி இடித்து விட்டார்கள் என்று நீங்கள் கூறுகிறீர்கள் அவ்வாறு இடித்துவிட்டார்கள் என்று காட்டுவதற்கு வழக்கறிஞர் ஆணையர் ஏதேனும் நியமனம் கோரி மனு தாக்கல் செய்தீர்களா என்றால் மனு தாக்கல் செய்யவில்லை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். அவர்கள் சி.எஸ்.ஆர் போட்டு உள்ளார்கள். எஃப்.ஐ.ஆர் போட்டு உள்ளார்கள். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக இதே நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கு அசல் வழக்கு எண் 380/2022 என்கிற வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் உரிமையாளர் என்று பரிகாரம் கோரவில்லை தடை உத்தரவு பரிகாரம் மட்டும் வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். உரிமை விளம்புகை பரிகாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி இல்லை. அந்த வழக்கில் நீதிமன்ற உத்தரவு மீறிவிட்டதாக ஒரு இடைக்கால மனு தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். நீதிமன்ற அவமதிப்பு குறித்து ஒரு மனு தாக்கல் செய்திருந்தீர்கள் அது உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். அது மட்டுமல்லாமல் இதே பரிகாரம் கோரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 183/2021 என்கிற ஒரு வழக்கினை இதே பரிகாரத்திற்காக தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளைக்காக ஒரு மனு தாக்கல் செய்திருந்தீர்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் ராம் மோகன் என்பவர் பதில் மனு தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 380/2022 என்கிற வழக்கினை தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். அசல் வழக்கில் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்கிற விவரத்தை இந்த வழக்கில் நீங்கள் சொல்லி உள்ளீர்களா என்றால் அந்த வழக்கு என் கணவர் போட்டது இந்த வழக்கு நானும் என்

கணவரும் சேர்ந்து போட்டதால் சொல்லவில்லை. ஆனால் வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்தும் பரிகாரமும் ஒன்றுதான் என்றால் சரிதான். ஏற்கனவே மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு என் கணவர் மட்டும் தாக்கல் செய்துள்ளார் இந்த வழக்கு நானும், என் கணவரும் சேர்ந்து தாக்கல் செய்துள்ளோம் என்று வழக்கில் சொல்லி உள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். நீங்கள் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை என்றால் சரியில்லை. நீங்கள் ஏற்கனவே தாக்கல் செய்த வழக்குகளை வேண்டுமென்றே மறைத்து நீதிமன்றத்தில் உத்தரவினை ஏமாற்றி பெற வேண்டும் என்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram